**தங்காலை நகர சபை - 2023**
**---------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தங்காலை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்காலை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 2,788,747 தொகை ஆண்டிற்கான வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பலவின வைப்புக்களின் கீழ் காணப்படுகின்ற ஒரே தடவையில் பெறும் பணம் ஏனைய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டது என. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுப் பெறுமதி ரூபா 715,397 தொகையான நுகர்வுப் பண்ட இருப்பு கணக்கீடு செய்திருக்கவில்லை. | களஞ்சியத்திலிருந்து வினியோக்கப்படாமல் மீதியாக இருக்கும் நுகர்வுப் பொருட்கள் இருப்பின் பெறுமதி மாத்திரம் கையில் இருப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது என. | இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | தங்காலை பஸ் நிலையத்தில் காணப்படும் 21 கடையறைகளுக்காக 2012 ஆண்டு முதல் 2016 ஏப்ரல் வரை கூட்டுத்தொகை ரூபா 543,400 பெற வேண்டிய கடை வாடகை சிட்டையிடப்பட்டிருக்காமையால் வருமானம் அதே பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2012 ஆண்டு முதல் 2016 ஏப்ரல் வரை கடை வாடகை சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை என. | பெற வேண்டிய வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 379,468 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் சரி செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 30,605,855 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | அனைத்துச் சொத்துக்களும் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி 2024 ஆண்டின் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 | வீதவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் 2013 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டின் வீதவரி அறவிடப்பட்டிருந்தமையால் பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்தப்படாத காலம் 5 வருடங்களாக காணப்பட்டது. | வீதவரி ஆதனங்களின் பெறுமதி மதிப்பீட்டை திருத்திக் கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினை வேண்டப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 74 மற்றும் 77 | நிலத்தின் உரிமையை சபைக்கு சட்டரீதியாக வழங்கியிருந்த வர்த்தக வளாகத்தில் அங்கீகாரமின்றி நிரந்தர கடையறைகள் நிர்மாணித்து வாடகைத் தொகையும் செலுத்தாமல் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளும் 13 கடையறைகள் தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடையறைகள் தொடர்பாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 28,954,795 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,775,520 தொகை ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 6,880,500 | 8,125,611 | 9,836,885 | 2,721,646 | 7,050,000 | 7,439,833 | 7,136,825 | 4,432,920 |
| வாடகை | 19,647,200 | 19,778,392 | 20,392,721 | 12,221,362 | 17,734,900 | 17,262,075 | 20,314,140 | 12,835,691 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 799,500 | 1,053,388 | 927,388 | 353,000 | 743,000 | 1,032,979 | 950,979 | 227,000 |
| ஏனைய வருமானங்கள் | 14,724,400 | 21,636,030 | 19,818,708 | 3,411,940 | 10,649,400 | 11,891,390 | 14,544,763 | 1,594,618 |
| **மொத்தம்** | **42,051,600** | **50,593,421** | **50,975,702** | **18,707,948** | **36,177,300** | **37,626,277** | **42,946,707** | **19,090,229** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1564 அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 2,234,701 தொகை மற்றும் 106 கடைகளிலிருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 7,396,737 தொகையினை அறவீடு செய்வதற்கு நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிலுவை வீதவரி மீதியினுள் 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 284,930 தொகை மற்றும் ரூபா 453,020 தொகை காணப்பட்டது. | வீதவரி மற்றும் கடை வாடகை முறையே ரூபா 261,389 தொகை மற்றும் ரூபா 5,153,429 தொகையினை அறவீடு செய்யப்பட்டதுடன், ரூபா 5,000 இற்கு மிகையான 94 வீதவரி அலகுகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 140 வர்த்தக அலகுகளில் இருந்து பெற வேண்டிய வர்த்தக வரி ரூபா 392,240 தொகை மற்றும் 15 கைத்தொழில் அலகுகளில் இருந்து பெற வேண்டிய கைத்தொழில் வரி ரூபா 22,000 தொகை 2022 திசெம்பர் 23 திகதிய இலக்கம் 2312 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி 2023 மார்ச் 31 இற்கு முன்னர் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தக வரி மற்றும் கைத்தொழில் வரி நிலுவையில் ரூபா 90,400 தொகை அறவிடப்பட்டது எனவும் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | S-24 ஆம் இலக்கம் கொண்ட கடையறைக்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2018 ஆண்டில் சமர்ப்பித்திருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 15,750 இற்கான பெறுமதி மதிப்பீட்டு வாடகையை அறவீடு செய்தல் மாதாந்த பொதுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளாமை மற்றும் 2022 பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 16,500 இற்கான மாதாந்த பெறுமதி மதிப்பீட்டு வாடகையை அறவீடு செய்வதற்கு மாதாந்த பொதுக் கூட்டத்தில் ஏற்றக்கொண்டிருந்த போதிலும், புதிய பெறுமதி மதிப்பீட்டு தொகைக்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1,115,000 தொகையாக இருந்தது. | இந்த கடையறை தொடர்பாக எடுக்க வேண்டிய தொடர்நடவடிக்கை தொடர்பாக உள்ளுராட்சி ஆணையாளரிடம் அறிவுரை வேண்டியுள்ளதுடன் அவரினால் வழங்கப்படும் அறிவுரையின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 32 ஆம் இலக்க கடையறை 1994 மே 19 திகதி முதல் வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளரினால் வாடகை செலுத்தாமையால் கடையறை அமைந்துள்ள இடத்தில் அங்கீகாரமின்றி இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணித்து சிற்றுண்டிச்சாலை ஒன்று நடாத்திச் சென்ற போதிலும் இது தொடர்பாக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை சபையின் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறை அமைந்துள்ள காணி தங்காலை பிரதேச செயலகத்திற்கு சொந்தமானது எனவும் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு நிதி மற்றும் கொள்கைகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என. | அங்கீகாரமற்ற கடையறை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நகர சபையின் அங்கத்தவர் ஒருவராக 2008 ஆண்டு முதல் 2023 ஆண்டு மார்ச் 18 வரை செயற்பட்ட நபர் ஒருவரினால் சபைக்கு சொந்தமான பஸ் நிலையத்தின் இலக்கம் S-01 கொண்ட கடையறையின் வாடகையாளராக தோன்றுதல் நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 227(1) அமைவாக இருக்காததுடன் அந்தக் காலவறைக்காக அவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,864,000 தொகைக்கான கொடுப்பனவுகளின் பெறுமதி மற்றும் அந்த கடையறைகளுக்காக மீளாய்வாண்டு இறுதி வரை பெற வேண்டிய கடை வாடகை ரூபா 946,011 தொகை மற்றும் ரூபா 43,000 இற்கான தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடையறைகள் தொடர்பாக குடியிருப்பு வாடகை முடிவுறுத்துவதற்காக 2023 ஒக்தோபர் 10 திகதி அறிவித்தல் வெளியிடப்பட்டது எனவும் அதற்குரிய வழக்குத் தவணை 2024 மே 10 திகதி மீண்டும் அழைப்பதற்கு உள்ளது எனவும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சபைச் செயலாளரை விழித்திருந்த தென் மாகாண பிரதி உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 ஏப்ரல் 23 திகதிய இலக்கம் 4/03/09 கொண்ட கடிதத்தின் பந்தி ii மூலம் S-1 கடையறையை உரித்தாக்குவதற்காக சட்ட நடவடிக்கை எடுத்தல் அல்லது 1979 இன் 07 ஆம் இலக்கம் கொண்ட அரச காணிகளின் சான்றிதழ்களை திருப்பிப் பெற்றுக்கொள்ளல் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என சுட்டிக் காட்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் இந்த கடையறை தொடர்பாக சட்டநடவடிக்கை சபையின் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடையறை தொடர்பாக குடியிருப்பு வாடகையை முடிவுறுத்துவதற்காக 2023 ஒக்தோபர் 10 திகதி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது எனவும் அதற்குரிய வழக்குத் தவணை 2024 மே 10 திகதி மீண்டும் அழைப்பதற்கு ஏற்பாடாக உள்ளமையால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | சபைக்கு சொந்தமான வாடி வீட்டை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 4,349,253 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவை மீதியில் 2 வருடங்களை மிகைத்த மீதி ரூபா 790,406 தொகை காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | அறிவித்தல் பலகைகள் 268 இல் இருந்து பெற வேண்டிய கட்டணம் ரூபா 268,000 தொகை, 85 வியாபார அலகுகளில் இருந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 85,000 தொகை மற்றும் 04 நிரந்தர அறிவித்தல் பலகைகள் அலகுகளிலிருந்து ரூபா 1,010,000 கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவித்தல் பலகைக் கட்டணம் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் முறையே ரூபா 14,000 தொகை மற்றும் ரூபா 3,000 தொகை அறவிடப்பட்டுள்ளது எனவும் நிரந்தர அறிவித்தல் பலகைக்காக சதுரஅடி ஒன்றிற்கு ரூபா 500 விலை அதிகமென கூறியமையால் ரூபா 150 வீதம் கட்டணத்தை திருத்துவதற்கு ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 2022 திசெம்பர் 23 திகதிய 2312 இலக்கம் கொண்ட வர்த்தமானிக்கு இணங்க உலகலாவிய அல்லது இணையதள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் மூலம் காட்சிப்படுத்தப்படும் நிரந்தர அறிவித்தல் பலகை தொடர்பாக சேவைக் கட்டணம் என சதுர அடி ஒன்றிற்கு ரூபா 500 தொகை வீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் அறிவித்தல் பலகை ஒன்றிற்கு ஒரு வருடத்திற்காக ரூபா 1,000 வீதம் சிட்டையிடப்பட்டிருந்தமையால் 13 அறிவித்தல் பலகைகளுக்காக | துணைச் சட்டத்தின் படி நிரந்தர அறிவித்தல் பலகைகளில் இருந்து அறவீடு செய்யக் கூடியதாக காணப்பட்டது ரூபா 1,000 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் மாத்திரமே. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 1,000,500 தொகை காணப்பட்டது. | | |
| (ஒ) | சபைக்கு சொந்தமான தீ மற்றும் அனர்த்த அலகின் மூலம் மற்றும் நோய்காவு வண்டி மூலம் பெற வேண்டிய ரூபா 654,825 தொகைக்கான வருமானத்தை அறவீடு செய்வதற்கு நகர சபைக் கட்டணைச் சட்டத்தின் பிரிவு 170அ(1) மற்றும் (2) இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 15,636,568 தொகையாகும். | ரூபா 4,399,979 தொகை அறவிடப்பட்டது எனவும் மீதி நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 23 திகதிய இலக்கம் 2312 கொண்ட வர்த்தமானியின் படி அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரம் நிறுவப்பட்டுள்ள நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்காக சதுர அடி ஒன்றிற்கு ரூபா 75 வீதம் அறவிட முடியுமெனினும் அந்தக் கட்டிடத்தை ரூபா 1,000 இற்கு உச்ச எல்லையாக வரையறுக்கப்பட்டிருந்தமையால் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. | சபையினால் ஏற்றுக் கொண்டிருந்த துணைச் சட்டத்தின் படி நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடக் கூடிய கட்டணம் ரூபா 2.5 தொகை எனவும் பின்னர் அங்கத்தவர்களின் விருப்பின் பேரில் அறிவித்தல் பலகைக் கட்டணம் தீர்மானிக்கப்பட்டது என. | வர்த்தமானி ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகள் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் செயற்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 2,500,000 தொகைக்கான 5 அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தாமல் சபையின் வருமானத்தை வங்கியில் இடுவதற்கு சபை முகாமைத்துவம் | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை போதியளவாக காணப்படாமை, அதிக மழை மற்றும் தற்போது சில செயற்திட்டங்கள் தேவையில்லாமல் காணப்படல் காரணமாகும் என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பட்டிருந்தமையால் நகர சபை கட்டளைச் சட்டத்தின் மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்த கருமங்கள் மற்றும் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | | |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையினால் அனுபவிக்கப்படும் 21 காணிகள் மற்றும் கட்டிடங்கள் சட்டரீதியான உரிமையை சபையின் பெயருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை உரித்தாக்குவதற்குரிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 671,400 இற்கான கொள்வனவு தொடர்பாக 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1(அ) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகைக்கான பண்டங்கள் அல்லது சேவைகளுக்காக கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளும் போது விரிவான விபரங்களைக் கொண்ட விவரக் குறிப்புகளைக் கொண்ட கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கம்பெக்டர் வாகனத்திற்காக கூட்டுப் பெறுமதி ரூபா 324,000 தொகைக்கான 04 டயர்கள் கொள்வனவு செய்வதற்காக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கை கூறுவிலை அழைத்து கடிதத்தின் உத்தரவாத காலம், இனம், இழைகளின் எண்ணிக்கை உற்பத்தி நாடு மற்றும் விலை ஆகிய விவரக் குறிப்பு விடயங்கள் இடையே விலை மற்றும் இனம் மாத்திரம் கவனத்தில் எடுத்து தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கொள்வனவு செய்வதற்கு தகுதியான நிறுவனங்களை தெரிவு செய்தல் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.6 (அ)(ii) இற்கு அமைவாக காணப்படவில்லை. | எதிர்காலத்தில் நடைபெறும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவில் இது தொடர்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாணவர்களின் திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பரிசுகள் வழங்குவதற்கு அவசர பெறுகை என கணித்து கூட்டுத்தொகை ரூபா 140,270 | உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் எழுத்துமூல அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அதற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பெறுமதியான 120 பக்கங்களை உடைய 830 CR புத்தகங்கள் கொள்வனவு செய்திருந்தது. | | |
| (ஈ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.8.1 (அ) இன் படி ஏதேனும் அங்கத்தவர் ஒருவர் பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு இரண்டிலும் அங்கத்தவராக இருக்க முடியாதிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமல் கூட்டுப்பெறுமதி ரூபா 902,200 இற்கான மூன்று கொள்வனவுகள் தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர் ஒருவர் பெறுகைக் குழுவிலும் அங்கத்தவராக கடமையாற்றி இருந்தது. | பெறுகை குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு ஆகிய இரண்டு குழுக்களிலும் ஒரே அங்கத்தவரை நியமனம் செய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண குறித்தொதுக்கிய மானிய – 2023 இன் கீழ் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 04 நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்காக ரூபா 2,000,000 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அந்த நிர்மாண வேலைகளை மதிப்பிடப்பட்டவாறு செயற்படுத்தி இருக்காமையால் மற்றும் சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 569,794 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பணம் சேமிக்கப்படாத முறையில் மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | சரியாக மதிப்பீடு தயாரிப்பதற்கும் மதிப்பிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைகளுக்குரிய பலப்படுத்துவதற்கான கம்பி இடவேண்டிய முறை காட்டும் அட்டவணை (bar bending schedule) தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாமல் பலப்படுத்தலுக்காக ரூபா 442,725 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த தவறு அடுத் மதிப்பீட்டிற்கான கொடுப்பனவு செய்யும் போது ஏற்படாமல் இருப்பதற்காக பொறுப்புடன் செயற்படுத்த வேண்டும் என. | பலப்படுத்தலுக்கான கம்பிகள் போடப்படும் முறையை காட்டும் அட்டவணை சமர்ப்பிக்கப்படாமல் கம்பிகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாது. |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மனிதவள முகாமைத்துவம் சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 147 மற்றும் 144 ஆகக் | மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் | பதவியணி மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமையால் 07 பதவிகளுக்கான 26 மிகையினை முறைப்படுத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், வெற்றிட பதவிகளின் கடமைகள் மிகைப் பதவிகளினால் அணவல் செய்யப்படுகின்றது எனவும். | |
| (ஆ) | ஆண்டிற்கு உரித்தாகவுள்ள விடுமுறை நாட்கள் 45 இனை மிகைத்து 17 சபை ஊழியர்கள் 2022 ஆண்டின் போது 701.5 விடுமுறை நாட்கள் மற்றும் 2023 ஆண்டின் போது 25 ஊழியர்கள் 1142 விடுமுறை நாட்கள் பெற்றுக் கொண்டிருந்தமையால் சபையின் நாளாந்த அலுவல்கள் மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டிருந்தமையால் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு சபையின் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சுகாதார தொழிலாளர்கள் அடிக்கடி சுகாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்தல், அறிவிக்காமல் சேவைக்கு வராமல் இருத்தல் மற்றும் ஊழியர் ஒருவர் உள்ளூராட்சி தேர்தல் அபேட்சகர் ஒருவராக முன்வந்துள்ள காரணத்தினால் விடுமுறைகள் பெற்றுக் கொள்ளல் ஆகிய விடயங்கள் காரணமாக இருந்தது என. | சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்வதை முகாமைத்துவப்படுத்த வேண்டும். |
| (இ) | 2012 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இறந்திருந்த இரண்டு ஊழியர்களிடமும் பெற வேண்டிய விழா முற்பணம் ரூபா 5,000 இடர்கடன் ரூபா 46,135 இனை அறவீடு செய்வதற்காக முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 15,010 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு பிணையாளர்கள் காணப்படாமை அத்துடன் ரூபா 36,125 இற்கான ஊழியர் கடனை அறவீடு செய்வதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 தோற்றக் கூடிய முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையின் திகதி முத்திரை மற்றும் கடிதத் தலைப்பை பயன்படுத்தி கட்டிட வரைபொன்று மற்றும் இணக்கச் சான்றிதழ் ஒன்று போலியாக தயாரித்து வெளித்தரப்பினர் ஒருவருக்கு வழங்கியிருந்ததுடன் அந்த போலி ஆவணம் சபையின் தொழிநுட்ப உத்தியோத்தர் ஒருவர் தொடர்புகொண்டு தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நபருக்க வழங்கியிருந்ததுடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்வுக்குரிய ஆரம்ப விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |